கோவை மாவட்டத்தில் 8,585 மகளிர் சுய உதவிக் குழுக்களில் 82,850 பேர் உறுப்பினர்களாக உள்ளனர். கிராமங்களில் மட்டும் 7,340 குழுக்களில் 72,674 பேர் உறுப்பினர்களாக உள்ளனர். நகர்ப்புறத்தில் உள்ள 1245 குழுக்களில் 10,176 பேர் உறுப்பினர்களாக உள்ளனர்.

கோவை செம்மொழிப் பூங்காவில் மலர் கண்காட்சி அமைக்க மாநகராட்சி பட்ஜெட்டில் திட்டமிடப்பட்டது. நகரின் சுற்றுலா வளர்ச்சிக்கும், பொருளாதார முன்னேற்றத்துக்கும் இது உதவும். ஆண்டுதோறும் கோவை செம்மொழிப் பூங்காவில் மலர் கண்காட்சி நடத்த மாநகராட்சி நிதி ஒதுக்க உள்ளது.

திருவண்ணாமலை மாநகரில்

புதிய பேருந்து நிலையம் முழுமையாக செயல்பாட்டுக்கு வந்தது

திருவண்ணாமலை

திருவண்ணாமலையில் புதிய பேருந்து நிலையம் நேற்று முதல் முழுவதுமாக பயன்பாட்டுக்கு கொண்டு வரப்பட்டுள்ளதையடுத்து, பழைய மத்திய பேருந்து நிலையம் வெறிச்சோடி காணப்பட்டது.

திருவண்ணாமலை மாநகரில் புதியதாக ரூ.44.9 கோடி மதிப்பில் அமைக்கப்பட்டுள்ள கலைஞர் நூற்றாண்டு பேருந்து நிலையம் நேற்று முதல் முழுமையாக செயல்பாட்டுக்கு வந்தது.

திருவண்ணாமலை மாவட்டம் பிரிக்கப்பட்ட பின்னர் கடந்த 1989-ம் ஆண்டு முதல் நகரில் மைய பகுதியில் மத்திய பேருந்து நிலையம் செயல்பட்டு வந்தது. பின்னர், நகர வளர்ச்சி மற்றும் அண்ணாமலையார் கோயிலுக்கு பக்தர்களின் வருகை நாளுக்கு நாள் அதிகரித்து வருவதால் நகரின் மைய பகுதியில் உள்ள பழைய மத்திய பேருந்து நிலையத்தை வேறு பகுதியில் புதியதாக ஒருங்கிணைந்த பேருந்து நிலையம் அமைக்க வேண்டும் என பொது மக்களின் நீண்ட காலமாக கோரிக்கை வைத்து வந்தனர்.

மக்களின் பல ஆண்டுகால கோரிக்கையை தொடர்ந்து, கடந்த திமுக ஆட்சியில் திருவண்ணாமலை மாநகராட்சி திண்டிவனம் சாலையில் ரயில் நிலையம் அருகே சுமார் 10.4 ஏக்கர் நிலப்பரப்பில், புதிய பேருந்து நிலையம் ரூ.44.9 கோடி மதிப்பில் கட்டப்பட்டு 2016 ஜனவரி 13-ம் தேதி திறக்கப்பட்டு கலைஞர் நூற்றாண்டு பேருந்து நிலையம் செயல்பாட்டுக்கு கொண்டுவரப்பட்டது.

அப்போது, புதிய பேருந்து நிலையத்தில் கூடுதல் பேருந்துகள் நிறுத்துவதற்கான பணிகள் நடைபெற்று வந்ததால், புதிய பேருந்து நிலையத்திலிருந்து சென்னை, விழுப்புரம், புதுச்சேரி, திருச்சி, மதுரை, நாகர்கோவில், கும்பகோணம் ஆகிய மார்க்கமாக இயக்கப்பட்டு வந்த புறநகர் பேருந்துகள் மட்டும் இயக்கப்பட்டு வந்தன.

பழைய பேருந்து நிலையத்திலிருந்து வேலூர், ஆரணி, காஞ்சிபுரம், வந்தவாசி, கிருஷ்ணகிரி, தருமபுரி, ஒசூரு, பெங்களூரு, சேலம், ஈரோடு, கோயம்புத்தூர், சித்தூர், திருப்பதி ஆகிய பகுதிகளுக்கு செல்லும் புறநகர் பேருந்துகள் இயக்கப்பட்டு வந்தன. இரண்டு பேருந்து நிலையங்கள் செயல்பட்டு வந்ததால் பொதுமக்கள் கடும் சிரமத்துக்குள்ளாகி வந்தனர்.

இந்நிலையில், புதிய பேருந்து நிலையத்தில் அனைத்து பணிகளும் நிறைவடைந்தயைடுத்து, நேற்று முதல் புதிய பேருந்து நிலையம் முழுமையாக செயல்பாட்டுக்கு கொண்டுவரப்பட்டு, அனைத்து பேருந்துகளும் புதிய பேருந்து நிலையத்திலிருந்து இயக்கப்பட்டு வருகின்றன. இதனால், திருவண்ணாமலையில் மாவட்டம் உதயமானது முதல் சுமார் 35 ஆண்டுகளுக்கு மேலாக செயல்பட்டு வந்து பழைய மத்திய பேருந்து நிலையம் நேற்று முதல் மூடப்பட்டதையடுத்து வெறிச்சோடி காணப்பட்டது.

இந்நிலையில் பேருந்து ஆட்டோ ஓட்டுநர்கள், பழைய பேருந்து நிலையத்தை மீண்டும் இயக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் எனக்கோரி ஆட்சியர் அலுவலகத்தில் நேற்று கோரிக்கை மனு அளித்துள்ளனர்.

நில அபகரிப்பில் ஈடுபட முயன்றதாக

திமுக முன்னாள் அமைச்சர் தா.மோ.அன்பரசன் மீது புகார்

சென்னை

ஆலந்தூரில் உள்ள தனியார் நிலத்தை சட்டவிரோதமாக ஆக்கிரமித்து, நில அபகரிப்பில் ஈடுபட முயன்றதாக திமுக முன்னாள் அமைச்சர் தா.மோ.அன்பரசன் மீது புகார் பெறப்பட்டது. அதன் பேரில் போலீஸார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

தமிழகத்தில் தமிழக வெற்றிக்கழகம் ஆட்சிப்பொறுபேற்றது, முதல் திமுக முன்னாள் அமைச்சர்கள் மற்றும் நிர்வாகிகள் மீது அவ்வப்போது புகார்கள் வருகின்றன, காவல்துறையும் அந்த புகார்கள் தொடர்பான நடவடிக்கைகளும் எடுத்து வருகின்றன. முன்னாள் அமைச்சர் எ.வ.வேலு மீது லஞ்ச ஒழிப்புத்துறை வழக்கு, செந்தில் பாலாஜி மீது குதிரை பேர வழக்கு என திமுகவினர் மீது புகார்கள் வந்த வண்ணம் உள்ளன.

இந்நிலையில் முன்னாள் அமைச்சர் தா.மோ.அன்பரசன் மீதும் நில அபகரிப்பு புகார் ஒன்று கொடுக்கப்பட்டுள்ளது. சென்னை தியாகராய நகர் பகுதியைச் சேர்ந்த ராஜேஷ் சோமசுந்தரம் என்பவர் பிசிஎம் சன்ஸ் என்ற பெயரில் தனியார் நிறுவனம் ஒன்றை நடத்தி வருகிறார். இவர், கடந்த 26-ம் தேதி முதலமைச்சர் தனிப்பிரிவில் திமுக முன்னாள் அமைச்சர் தா.மோ.அன்பரசன், அவரது உதவியாளர் ஜெய்சங்கர் மற்றும் தற்போது திருப்போரூர் வட்டாட்சியராக பணியாற்றி வரும் ஆறுமுகம் ஆகியோர் மீது நில மோசடி புகார் ஒன்றை அளித்துள்ளார்.

அதில், சென்னை ஆலந்தூர் வடக்கு பரேடு சாலையில் தனக்கு சொந்தமாக 5,500 சதுர அடியில் நிலம் ஒன்று உள்ளதாக தெரிவித்துள்ளார்.

இந்நிலையில் கடந்த 2024 ஆண்டு நடைபெற்ற நாடாளுமன்ற தேர்தலில் போது திமுக முன்னாள் அமைச்சர் தா.மோ அன்பரசனின் உதவியாளர் ஜெய்சங்கர் அறிவுறுத்தலின் பேரில் தேர்தல் பணிமனை அமைப்பதற்காக குன்றத்தூரைச் சேர்ந்த உலகநாதன் என்பவனுக்கு ஆறு மாத காலம் குத்தகைக்கு கொடுத்துள்ளார்.

ஆனால், குத்தகை காலம் முடிந்தும் கடந்த 2 ஆண்டுகளாக இடத்தையும் திருப்பி கொடுக்காமல், வாடகை தராமல் இடத்தை ஆக்கிரமிப்பு செய்து வைத்துள்ளதாக புகாரில் குறிப்பிட்டுள்ளார். பின்னர் சம்பந்தப்பட்ட நபர்களை தொடர்பு கொள்ள முயன்றபோது அவர்கள் போலி அடையாள ஆவணங்களை கொடுத்து ஏமாற்றியது தெரிய வந்ததாக புகாரில் குறிப்பிட்டுள்ளார்.

இதையடுத்து, கடந்த ஜூன் மாதம் திமுக முன்னாள் அமைச்சர் தா.மோ.அன்பரசனை நேரில் சந்தித்து புகார் தெரிவித்தபோது அவர் ஒரு வாரத்துக்குள் நிலத்தை தன்னிடம் கொடுத்துவிடும் படியும், அதற்குண்டான பணத்தை தருவதாக கூறினார். ஆனால் நான் நிலத்தை விற்க மாட்டேன் என கூறிவிட்டேன். எனவே, தனக்கு சொந்தமான நிலத்தை மீட்டு சம்பந்தப்பட்ட நபர்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று புகாரில் தெரிவித்துள்ளார்.

மேலும், ராஜேஷ் சோமசுந்தரம் இது குறித்து பரங்கிமலை துணை ஆணையர் அலுவலகத்தில் புகார் அளித்துள்ளார். அதன்பேரில் பரங்கிமலை போலீஸார் புகாரை ஏற்றுக்கொண்டு விசாரணை நடத்தி வருகின்றனர்.

கலவை அடுத்த சென்னசமுத்திரம் கிராமத்தில்

நீரின்றி காய்ந்த நெற்பயிருக்கு இழப்பீடு வழங்க வேண்டும்

குறைதீர்வு கூட்டத்தில் விவசாயி கோரிக்கை மனு

ராணிப்பேட்டை

ராணிப்பேட்டை ஆட்சியர் அலுவலகத்தில் மக்கள் குறைதீர்வு கூட்டம் ஆட்சியர் ப்ரியா தலைமையில் நேற்று நடைபெற்றது.

கலவை அடுத்த சென்ன சமுத்திரத்தில் நீரின்றி நெற்பயிர் காய்ந்துள்ளதாக இழப்பீடு வழங்க வேண்டும் என விவசாயி குறைதீர்வு கூட்டத்தில் கோரிக்கை மனுவை அளித்தார்.

ராணிப்பேட்டை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் மக்கள் குறைதீர்வு கூட்டம் நேற்று நடைபெற்றது. கூட்டத்துக்கு, மாவட்ட ஆட்சியர் ப்ரியா தலைமை தாங்கினார். மாவட்ட வருவாய் அலுவலர் பேபி இந்திரா, நேர்முக உதவியாளர் (பொது) கீதாலட்சுமி, பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர் மீனா, மாவட்ட சமூக நீதிதுறை அலுவலர் பூமா, உதவி ஆணையர் (கலால்) ராஜ்குமார், மாவட்ட வழங்கல் அலுவலர் பன்னீர்செல்வம் ஆகியோர் பங்கேற்று பொதுமக்களிடமிருந்து மனுக்களை பெற்று குறைகளை கேட்டறிந்தனர்.

அதன்படி, கலவை வட்டம் சென்னசமுத்திரம் கிராமத்தைச் சேர்ந்த பெண் விவசாயி பிரியா என்பவர் அளித்த மனுவில், "நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். எனக்கு சொந்தமான 3 ஏக்கர் நிலத்தில் சொர்ணவாரி பட்டத்தில் நெற்பயிர் செய்தோம். மழை இல்லாததால் கிணற்றில் நீர்மட்டம் குறைந்துவிட்டது. இதனால், பயிருக்கு தண்ணீர் பாய்ச்ச முடியாத நிலை உள்ளது. போதுமான தண்ணீர் இல்லாததால் பயிர்கள் வாடி போய்விட்டன. நெற்பயிருக்கு வறட்சி நிவாரணம் நிதியை வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும்" என தெரிவித்துள்ளார்.

நெமிலி வட்டம் ரெட்டி வலத்தில் உள்ள தனியார் பள்ளி நிர்வாகம் சார்பில் அளித்த மனுவில், "ராணிப்பேட்டை மாவட்டம் பனப்பாக்கம் ரெட்டி வலம் கிராமத்தில் தனியார் மெட்ரிக் மேல்நிலை பள்ளி உள்ளது. ஏற்கெனவே பள்ளி அருகே இருந்த டாஸ்மாக் மதுபானக்கடை பலமுறை கோரிக்கைகள் வைத்த பிறகு அகற்றப்பட்டது. தற்போது, மீண்டும் பள்ளி அருகே டாஸ்மாக் மதுபானக்கடை அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. மாணவர்களின் நலன் கருதி மாவட்ட நிர்வாகம் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்" என தெரிவித்துள்ளனர்.

இதேபோல, மாவட்டத்தின் பல்வேறு இடங்களில் இருந்து வந்து பொதுமக்களிடமிருந்து மொத்தம் 452 மனுக்கள் பெறப்பட்டன. இதில், பல்வேறு துறை சார்ந்த அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

TAMILNADU SMALL INDUSTRIES DEVELOPMENT CORPORATION LIMITED
Regd. Office: TANSIDCO Corporate Office,
Thiru.Vi.Ka. Industrial Estate, Guindy, Chennai - 600 032, Phone: 2950 1461 / 2950 1422.
Fax: 2950 0792. E-Mail: ho@tansidco.org, Website: www.tansidco.tn.gov.in

TENDER NOTICE No: 3690(TN-1)/SE/DB/2026 **Date : 13.07.2026**

For and on behalf of the Tamil Nadu Small Industries Development Corporation Limited, Online Tenders are invited under "Two Cover System" from the Reputed Company in Housekeeping / Facility Management Service and Class-IV & Above contractors as per G.O. (Ms) No.37 Public Works (G2) Dept. Dt.17.06.2022 for the works mentioned below.

Sl. No.	Name of work	EMD in Rs. (Online Only	Value put to Tender Rs.in Lakhs	Period of Completion
1	Housekeeping, Supply of Technical Man Power at TANSIDCO Corporate Office Building, Guindy	53,000/-	85.02	12 Months
2	Providing Boundary Wall and Concrete Road at TANSIDCO Industrial Estate, Katpadi in Vellore District	38,000/-	55.44	3 Months

The tender documents will be available online from **21.07.2026** in the portal **https://tntenders.gov.in** at free of cost.
Last date for receipt of tender **28.07.2026** upto **15.00 Hrs**; Date of tender opening - **29.07.2026** at **15.30 Hrs.**
Further details can be seen on the portal **https://tntenders.gov.in.**

SUPERINTENDING ENGINEER i/c
TANSIDCO, CHENNAI - 600 032.

DIPR/ 2273 /TENDER/2026

IGARASHI
MOTORS INDIA LTD.
பதிவு அலுவலகம்: பிளாட் எண் B-12 to B-15, Phase II, MEPZ- SEZ, தாம்பரம், சென்னை, தமிழ்நாடு, இந்தியா,
CIN: L29142TN1992PLC021997, போன் : +91-44-42298199/ 22628199
மின்னஞ்சல் : investorservices@igarashimotors.co.in / Website: www.igarashimotors.com

34-வது ஆண்டு பொதுக்குழு கூட்டத்திற்கான அறிவிப்பு

நிறுவனத்தின் 34வது ஆண்டு பொதுக்குழு கூட்டம் ('AGM'), **ஆகஸ்ட் 07, 2026, வெள்ளிக்கிழமை அன்று காலை 10:00 மணிக்கு (IST)** வீடியோ கான்பரன்சிங் ('VC') / பிற ஆடியோ-விஷுவல் முறைகள் ('OAVM') மூலம் இந்த அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள செயல் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக நடத்தப்படும் என்று இதன் வழியாக அறிவிப்பு வழங்கப்படுகிறது.

2025 செப்டம்பர் 22 தேதியிட்ட எம்சிஏ பொது சுற்றறிக்கை எண். 03/2025 –ன்படி, ஒரு பொது அமைவிடத்தில் உறுப்பினர்களின் நேரடி பங்கேற்பு இல்லாமல், வீடியோ கான்பரன்சிங் வழியாக ஆண்டு பொதுக்குழு கூட்டத்தை நடத்த நிறுவனங்கள் அனுமதிக்கப்படுகின்றன. எனவே, இச்சுற்றறிக்கைக்கு இணங்க, நிறுவனத்தின் 34வது ஆண்டு பொதுக்குழு கூட்டம் வீடியோ கான்பரன்சிங் முறையின் கீழ் நடத்தப்படுகிறது. 34வது ஆண்டு பொதுக்குழு கூட்டம் நடைபெறும் அமைவிடமாக நிறுவனத்தின் பதிவு அலுவலகம் இருக்கும்.

மேற்குறிப்பிட்ட சுற்றறிக்கைக்கு இணங்க, 2025–26 நிதியாண்டிற்கான தணிக்கை செய்யப்பட்ட நிதி அறிக்கை முடிவுகள் உட்பட 34–வது ஆண்டு அறிக்கை, 34–வது ஆண்டுப் பொதுக்குழு கூட்ட அறிவிப்புடன், நிறுவனத்தில்/ டெபாசிட்டரி பங்கேற்பாளர்களுடன் ('DPs') தங்கள் மின்னஞ்சல் முகவரியைப் பதிவு செய்துள்ள அனைத்து உறுப்பினர்களுக்கும் ஜூலை 03, 2026 அன்று மின்னணு முறையில் அனுப்பப்பட்டுள்ளது.

இந்த ஆவணங்கள், http://www.igarashimotors.com/investor-list.php?invescatid=17 என்ற இந்நிறுவனத்தின் இணையதளத்திலும் கிடைக்கப் பெறுகின்றன. இந்த அறிவிப்பை பங்குச் சந்தைகளின் இணையதளங்களான பிஎஸ்இ லிமிடெட் (www.bseindia.com) மற்றும் இந்திய தேசிய பங்குச் சந்தை லிமிடெட் (www.nseindia.com) ஆகியவற்றிலும் காணலாம்.

மார்ச் 31, 2026 அன்று முடிவடைந்த நிதியாண்டிற்கான இறுதி ஈவுத்தொகை (டிவிடெண்ட்) என்ற நோக்கத்திற்காக, நிறுவனத்தின் உறுப்பினர்கள் பதிவேடு **ஆகஸ்ட் 01, 2026 முதல் ஆகஸ்ட் 07, 2026 வரை (இரு நாட்களும் உட்பட)** மூடப்பட்டிருக்கும்.

நிறுவனங்கள் சட்டம், 2013–ன் விதிகளுக்கு உட்பட்டு, இயக்குநர்கள் குழுவால் பரிந்துரைக்கப்பட்ட இறுதி ஈவுத்தொகையானது, இக்கூட்டத்தில் அறிவிக்கப்படுமானால், **ஜூலை 31, 2026 ('பதிவு நாள்')** அன்று உறுப்பினர் பதிவேட்டில் பெயர் இடம் பெற்றுள்ள உறுப்பினர்களுக்கு **ஆகஸ்ட் 07, 2026 அன்று அல்லது அதற்குப் பிறகு** வழங்கப்படும்.

34–வது ஆண்டு பொதுக்குழு கூட்ட அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள செயல் நடவடிக்கைகள் மீது தொலைதூர மின்–வாக்களிப்பு வசதி மற்றும் ஆண்டு பொதுக்குழு கூட்டத்தில் மின்–வாக்களிப்பு ஆகிய இரண்டின் மூலமாகவும் மின்னணு முறையில் தங்கள் வாக்குரிமையைப் பயன்படுத்த, தனது உறுப்பினர்களுக்கு வசதியை நிறுவனம் வழங்குகிறது. அனைத்து உறுப்பினர்களுக்கும் இதன் மூலம் தெரிவிக்கப்படுவது என்னவென்றால்:

i **ஆகஸ்ட் 07, 2026 அன்று காலை 10:00 மணிக்கு (IST)** VC/OAVM மூலம் 34வது ஆண்டு பொதுக்குழு கூட்டத்தில் உறுப்பினர்கள் கலந்து கொள்ளலாம். **இணைப்பு – B**–ல் தரப்பட்டுள்ள 34வது ஆண்டு பொதுக்குழு கூட்ட அறிவிப்பின் அறிவுறுத்தல்களை தயவுசெய்து காணவும்.

ii **ஜூலை 31, 2026** என்ற செயல்தடை (கட் ஆஃப்) தேதியின்படி, உறுப்பினர்கள் பதிவேட்டில் அல்லது டெபாசிட்டரிகளால் பராமரிக்கப்படும் பயனாளிகளின் பதிவேட்டில் பெயர் இடம் பெற்றுள்ள உறுப்பினர்கள் மட்டுமே தொலைதூர மின்–வாக்களிப்பு வசதியைப் பெற அல்லது ஆண்டு பொதுக்குழு கூட்டத்தில் மின்–வாக்களிப்பை செய்ய தகுதி உள்ளவர்களாக இருப்பார்கள். ஆண்டு பொதுக்குழு கூட்டத்தின் போது, தொலைதூர மின்–வாக்களிப்பு வசதியையும் மற்றும் மின்–வாக்களிப்பு வசதியையும் வழங்க சிடிஎஸ்எல் (CDSL) நியமனம் செய்யப்பட்டிருக்கிறது.

iii தொலைதூர மின்–வாக்களிப்பு **ஆகஸ்ட் 04, 2026, செவ்வாய்க்கிழமை காலை 9:00 மணிக்கு (IST)** தொடங்கி, **ஆகஸ்ட் 06, 2026, வியாழக்கிழமை மாலை 5:00 மணிக்கு (IST)** முடிவடையும். **ஆகஸ்ட் 06, 2026 அன்று மாலை 5:00 மணிக்கு (IST)** மேல் தொலைதூர மின்–வாக்களிப்பு அனுமதிக்கப்படாது. மேலும் ஒரு தீர்மானத்தின் மீது உறுப்பினர் வாக்களித்தவுடன், பின்னர் அதை மாற்ற அவ்வுறுப்பினர் அனுமதிக்கப்பட மாட்டார். **இணைப்பு – A**–ல் தரப்பட்டுள்ள 34–வது ஆண்டு பொதுக்குழு கூட்ட அறிவிப்பின் அறிவுறுத்தல்களை தயவுசெய்து காணவும்.

iv ஆண்டு பொதுக்குழு கூட்டத்திற்கு முன்பு தொலைதூர மின்–வாக்களிப்பு மூலம் வாக்களித்த உறுப்பினர்கள் VC/OAVM மூலம் ஆண்டு பொதுக்குழு கூட்டத்தில் கலந்து கொள்ளலாம்; ஆனால் மீண்டும் வாக்களிக்க அவர்களுக்கு உரிமைத்தகுதி இருக்காது. தொலைதூர மின்–வாக்களிப்பு மூலம் வாக்களிக்காத மற்றும் VC/OAVM மூலம் ஆண்டு பொதுக்குழு கூட்டத்தில் கலந்துகொள்ளும் உறுப்பினர்கள், ஆண்டு பொதுக்குழு கூட்டத்தில் மின்–வாக்களிப்பு மூலம் வாக்களிக்க உரிமைத்தகுதி கொண்டிருப்பார்கள்.

v தங்கள் மின்னஞ்சல் முகவரியைப் பதிவு செய்யாத உறுப்பினர்கள், மின்னணு வடிவத்தில் வைத்திருக்கும் பங்குகளுக்கு தங்கள் டெபாசிட்டரி பங்கேற்பாளர்(கள்) மூலமாகவும், அச்சுப் பிரதியாக வைத்திருக்கும் பங்குகளுக்கு பதிவாளர் மற்றும் பங்குப் பரிமாற்ற முகவர் (RTA)–ன் https://Investors.cameoindia.com என்ற இணையதளத்திற்குச் சென்று பதிவு செய்யுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

vi வழங்குமிடத்தில் ஈவுத்தொகை மீது வரிப் பிடித்தம் **(TDS)** தொடர்பான அறிவுறுத்தல்கள் அறிவிப்பின் பக்கம் எண். 50–ல் குறிப்பிடப்பட்டுள்ளன. நிறுவனத்தின் இணையதள இணைப்பான https://www.igarashimotors.com/investor-list.php?invescatid=34 இல் கிடைக்கும் "Communication on TDS on Dividend Distribution" என்பதில் கூடுதல் தகவல்களை பெறலாம்.

vii மின்–வாக்களிப்பு செயல்முறையை நியாயமான மற்றும் வெளிப்படையான முறையில் நடத்துவதற்காக, சென்னையைச் சேர்ந்த நிறுவனச் செயலாளர்கள் நிறுவனமான பிபி & அசோசியேட்ஸ்–ஐ, (மின்னஞ்சல் prabhakar@bpca.one) சரிபார்ப்பு ஆய்வாளராக இயக்குநர்கள் குழு நியமித்துள்ளது.

மின்–வாக்களிப்பு முடிவுகள், ஆண்டு பொதுக்குழு கூட்டம் முடிவடைந்ததிலிருந்து இரண்டு அலுவல் நாட்களுக்குள் நிறுவனத்தால் அறிவிக்கப்படும் மற்றும் பங்குச் சந்தைகளுக்கும் தெரிவிக்கப்படும்.

இயக்குநர்கள் குழுவின் ஆணைப்படி
இகராஷி மோட்டார்ஸ் இந்தியா லிமிடெட்-க்காக
பி. தினகர பாபு
நிறுவனச் செயலாளர் & இணக்க அதிகாரி
உறுப்பினர் எண். A14812

இடம்: சென்னை
தேதி: ஜூலை 13, 2026

அரசியல், சமூக அமைப்புகள் தங்களது செய்திகளை எங்களது நாளிதழுக்கு மின்னஞ்சல் வழியாக அனுப்பலாம்.
மின்னஞ்சல் முகவரி: repvellore@hindutamil.co.in

Central Bank of India
सेन्ट्रल बैंक ऑफ़ इंडिया
சென்ட்ரல் பாங்க் ஆஃப் இந்தியா
1911 से आपके लिए "केंद्रित" "CENTRAL" TO YOU SINCE 1911

கீழ்ஆலத்தூர் கிளை
P.O.113-B, காட்பாடி மெயின் ரோடு, கீழ்ஆலத்தூர்
வேலூர் மாவட்டம், தமிழ்நாடு மாநிலம்-635803
Tel: 0417-1245433, bmchen1905@centralbank.bank.in,

SARFAESI சட்டம் 2002-ன் கீழ் இ-ஏல விற்பனை அறிவிப்பு

கடனீட்டு சொத்துக்களை ரொக்கமாக்குதல் நிதிச் சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் கடனீட்டு சொத்துக்கள் அமலாக்கச் சட்டம் 2002 பாதுகாப்பு நடைமுறை விதிகள் 2002 விதி எண்.8(6) & 9(1)-ன் கீழ் அடமானம் வைக்கப்பட்டுள்ள அசையா சொத்துக்களை விற்பனை செய்தல்.

சென்ட்ரல் பேங்க் ஆப் இந்தியா-ல் அடமானத்தில் வைக்கப்பட்டுள்ள கீழ்கண்ட சொத்தினை சென்ட்ரல் பேங்க் ஆப் இந்தியா-ன் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியால் **நேரடியான சுவாதீனத்தில்** எடுக்கப்பட்டு அந்த சொத்து **"உள்ள இடத்தில் உள்ளவாறு", "உள்ளது உள்ளவாறு" மற்றும் "எந்த நிலையில் உள்ளதோ அந்த நிலையிலேயே"** என்ற அடிப்படையில் கடன்தாரர்/ அடமானதாரரிடமிருந்து கடன் தொகை மற்றும் வட்டி, இதர செலவுகளை சேர்த்து வசூலிப்பதற்காக **https://baanknet.com** என்ற இணையதளம் வழியாக **விற்பனை செய்யப்படும்** என இதன்மூலம் பொதுமக்களுக்கும் மற்றும் குறிப்பாக கடன்தாரர்களுக்கும் அறிவிக்கப்படுகிறது.

கடன்தாரர்: Mrs.ஜெயலட்சுமி.C, D/o.சின்னகண்ணு, **(1)** எண்.11/179, புதுமனை, நகல் கிராமம், கீழ்ஆலத்தூர் அஞ்சல், காட்பாடி தாலுகா, வேலூர்-635803 **(2)** மனை எண்.80, புதுமனை, நகல் கிராமம், கீழ்ஆலத்தூர் அஞ்சல், காட்பாடி தாலுகா, வேலூர்-635803 **சக-கடன்தாரர் / ஜாமீன்தாரர்: Mrs.சாமுண்டீஸ்வரி.R**, W/o.ராஜாராம், **(1)** எண்.61, இந்திராநகர் 3வது தெரு, வாலாஜாபாத், காஞ்சிபுரம் மாவட்டம், தமிழ்நாடு-631605 **(2)** மனை எண்.80, புதுமனை, நகல் கிராமம், கீழ்ஆலத்தூர் அஞ்சல், காட்பாடி தாலுகா, வேலூர்-635803

கோரிக்கை அறிவிப்பு தேதி: 06.12.2024 / கடன் நிலுவைத்தொகை: **01.07.2026** அன்றுள்ளபடி ₹ **5,15,656.87** சட்டரீதியான கட்டணங்கள், வட்டி, செலவுகள் தவிர்த்து; **சுவாதீனம் அறிவிப்பு தேதி: 15.03.2025**

அடமானத்தில் உள்ள சொத்து விவரம்

சர்வே விவரங்கள்: அரசு புஞ்சை பழைய சர்வே எண்.51/2B, புதிய சர்வே எண்.51/68, மனை எண்.80, புதுமனை, நகல் கிராமம், கீழ்ஆலத்தூர் அஞ்சல், காட்பாடி தாலுகா, வேலூர்-635803

ஷெட்யூல்-A: அரசு புஞ்சை பழைய சர்வே எண்.51/2B, புதிய சர்வே எண்.51/68, **மனை எண்.80, புதுமனை, நகல் கிராமம், கீழ்ஆலத்தூர் அஞ்சல், காட்பாடி தாலுகா, வேலூர்-635803** என்னும் முகவரியில் **1056 சதுர அடி சொத்து.** எல்லைகள்: வடக்கு: தெரு, தெற்கு: மனை எண்.81, கிழக்கு: பேபி-க்கு சொந்தமான மனை எண்.82, மேற்கு: அஞ்சலா-க்கு சொந்தமான மனை எண்.79.

குறைந்தபட்ச கேட்பு விலை	₹ **5,00,000/-**	**டேவணித்தொகை**	₹ **50,000/-**
ஏல உயர்வு தொகை	₹ **20,000/-**	**சுவாதீனம் வகை: நேரடியான (Physical)**	
இ-ஏல தேதி/நேரம்	**17.08.2026**	**காலை 11.00 மணி முதல் மாலை 4.00 மணி வரை**	

EMD சமர்ப்பிக்க கடைசி நாள்/நேரம்: 11.08.2026 மாலை 3.00 மணிக்குள்

சொத்தினை பார்வையிடும் தேதி மற்றும் நேரம்: 17.07.2026 காலை 10.00 மணி முதல் 4.00 மணி வரை

மேலும் விதிகள் மற்றும் நிபந்தனைகள் விபரத்திற்கு கீழ்கண்ட இணையதளத்திலிருந்து பதிவிறக்கம் செய்து கொள்ளலாம், இ-ஏல சேவை வழங்குனர் இணையதள முகவரி: **https://baanknet.com (அல்லது)** வங்கியின் இணையதள முகவரி: **https://www.centralbankofindia.bank.in**

சொத்துக்களை பார்வையிட மற்றும் இதர விவரங்களுக்கு, **பிராந்திய அலுவலகம், சென்னை, அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி, முதன்மை மேலாளர் Mr.Sandeep Satapathy, Mob: 98197 33110, கிளை மேலாளர், Mob: 78258 16391** அனைத்து வேலை நாட்களிலும் காலை 10.00 மணி முதல் மாலை 4.00 மணி வரை தொடர்பு கொள்ளவும்.

SARFAESI சட்டம், 2002 விதி 8(6) & 9(1)-ன்கீழ் 30 நாள் கால அவகாச விற்பனை அறிவிப்பு
மேற்காணும் கடன்தாரர்கள்/அடமானதாரர்களுக்கும் இதன்மூலம் அறிவிப்பதாவது யாதெனில் மேற்காணும் கடன்பாக்கி மற்றும் இதர செலவுகளை இ-ஏலத்தேதிக்கு முன்னர் செலுத்தத் தவறினால் அந்த சொத்து ஏலத்தில் விற்பனை செய்யப்பட்டு கடன் பாக்கி வசூலிக்கப்படும். பின்னர் பாக்கி ஏதேனும் இருந்தாலும் வட்டி மற்றும் இதர செலவுகளுக்கும் தங்களிடமிருந்து வசூலிக்கப்படும்.

இடம்: சென்னை
தேதி: 01.07.2026

அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி
சென்ட்ரல் பாங்க் ஆஃப் இந்தியா

வரி விளம்பரங்கள்

பொது

பொது அறிவிப்பு

கனம் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், ஆரணி.
I.A. No.1/2026 in O.S. 149/2017
K.P.சுப்பிரமணியன் -மனுதாரர்/வாதி
எதிர்
திருமதி.K.அன்பழகி க/பெ.காசிநாதன்
ரெட்டி தெரு,அரிஜன காலனி
ஆரணி to படவேடு சாலை, அரசு
பள்ளி அருகில், காமக்கூர்பாளையம்
கிராமம் காமக்கூர் அஞ்சல்
ஆரணி வட்டம் திருவண்ணாமலை
மாவட்டம். -எதிர்மனுதாரர்/பிரதிவாதி

அறிவிப்பு

மேற்படி வழக்கு சுப்பிரமணியன் என்பவருக்கு சேர வேண்டிய பாண்டு பாக்கிக்காக தாக்கல் செய்யப்பட்டதாகும். மேற்படி வழக்கு **04-01-2018** அன்று தள்ளுபடி செய்யப்பட்டது. மேற்படி உத்திரவை ரத்து செய்ய கோரி தாக்கல் செய்யப்பட்ட மனுவில் ஏற்பட்ட கால தாமதத்தை மன்னிக்க கோரி மேற்படி பிரிவு 5 இன் படி தாக்கல் செய்த மனு **I.A. No.1/2026** என்று நம்பராகி **17-08-2026** அன்று போடப்பட்டுள்ளது எனவே மேற்படி மனு **I.A. No.1/2026** சம்மந்தமாக தங்களுக்கு ஏதேனும் ஆட்சேபனை இருந்தால் வருகின்ற **17-08-2026** அன்று காலை **10.30** மணிக்கு மேற்படி நீதிமன்றத்தில் நேரில் ஆஜராகியோ அல்லது வழக்கறிஞர் மூலமாகவோ ஆஜராகி தங்களது ஆட்சேபனையை தெரிவித்துகொள்ள வேண்டியது. தவறும் பட்சத்தில் மேற்படி வழக்கு ஒரு தலை பட்சமாக தீர்மாணிக்கப்படும் என்பதை அறிந்து கொள்ளவும்.

G.L.வெங்கடசுப்பிரமணியன்,B.A.,LLB.,
வழக்கறிஞர் ஆரணி.

இந்து தமிழ் திசை

பொறுப்பல்ல: இந்தச் செய்தித்தாளில் பிரசுரம் ஆகியுள்ள விளம்பரங்களின் அடிப்படையில் செயல்படுமுன், அவற்றில் உள்ள தகவல்கள் சரியானவைதானா என்பதை போதுமான அளவு விசாரித்து சரிபார்த்துக்கொள்ளுமாறு வாசகர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். விளம்பரங்கள்/ விளம்பரதாரர் / அவர்களின் தயாரிப்புகள் / சேவைகள் போன்றவற்றின் நம்பகத்தன்மைக்கு இந்தச் செய்தித்தாளின் உரிமையாளரும் பதிப்பாளருமான கஸ்தூரி & சன்ஸ் லிமிடெட் / கே.எஸ்.எல். மீடியா லிமிடெட் உத்தரவாதம் அளிக்கவில்லை. இந்தச் செய்தித்தாளில் வெளியாகும் விளம்பரங்களால் ஏதேனும் சேதம் அல்லது இழப்பு ஏற்படும் பட்சத்தில், இந்தச் செய்தித்தாளின்/ மேற்சொன்ன நிறுவனங்களின் உரிமையாளர், பதிப்பாளர், அச்சிடுவோர், ஆசிரியர், இயக்குநர்கள், ஊழியர்கள் ஆகியோர் எந்தச் சூழலிலும் எந்த வகையிலும் அதற்குப் பொறுப்பாகமாட்டார்கள்.

படைப்புகளை அனுப்புவோர் பிரதி எடுத்துவைத்துக்கொண்டு அனுப்பவும். பிரசுரமாகாதவற்றைத் திரும்ப அனுப்ப இயலாது.

படிவம் எண். CAA.2
[நிறுவனங்கள் சட்டம், 2013-ன் பிரிவு 230(3) மற்றும் நிறுவனங்கள் (சமரசம், ஏற்பாடுகள் மற்றும் இணைத்தல்) விதிகள், 2016-ன் விதிகள் 6 மற்றும் 7 ஆகியவற்றின்படி]
CA(CAA)/20(AHM)2026
இணைப்புத் திட்டம் தொடர்பான விவகாரத்தில்

சுகவாலா ரினியூவபிள் எனர்ஜி பிரைவேட் லிமிடெட், CIN: U40100GJ2015PTC084653 R/o: 608-609, லெவல்-6, இம்பீரியல் ஹைட்ஸ் எதிரில், 150 அடி ரிங் ரோடு, ஏபி பார்க் அருகில், ரையா, ராஜ்கோட், குஜராத் 360005 **("விண்ணப்பதாரர் நிறுவனம் எண் 1"), பிபார்டோடா ரினியூவபிள் எனர்ஜி பிரைவேட் லிமிடெட்,** CIN: U40100GJ2015PTC084878, R/o: 608-609, லெவல்-6, இம்பீரியல் ஹைட்ஸ் எதிரில், 150 அடி ரிங் ரோடு, ஏபி பார்க் அருகில், ரையா, ராஜ்கோட், குஜராத் 360005 **("விண்ணப்பதாரர் நிறுவனம் எண் 2"), அம்ரேலி ரினியூவபிள் எனர்ஜி பிரைவேட் லிமிடெட்,** CIN: U40100GJ2015PTC084657, R/o: 608-609, லெவல்-6, இம்பீரியல் ஹைட்ஸ் எதிரில், 150 அடி ரிங் ரோடு, ஏபி பார்க் அருகில், ரையா, ராஜ்கோட், குஜராத் 360005 **("விண்ணப்பதாரர் நிறுவனம் எண் 3"), ராய்பார் ரினியூவபிள் எனர்ஜி பிரைவேட் லிமிடெட்,** CIN: U40109GJ2015PTC085095, R/o: 608-609, லெவல்-6, இம்பீரியல் ஹைட்ஸ் எதிரில், 150 அடி ரிங் ரோடு, ஏபி பார்க் அருகில், ரையா, ராஜ்கோட், குஜராத் 360005 **("விண்ணப்பதாரர் நிறுவனம் எண் 4"), ரதாபே ரினியூவபிள் எனர்ஜி பிரைவேட் லிமிடெட்,** CIN: U40100GJ2015PTCO84658, R/o: 608-609, லெவல்-6, இம்பீரியல் ஹைட்ஸ் எதிரில், 150 அடி ரிங் ரோடு, ஏபி பார்க் அருகில், ரையா, ராஜ்கோட், குஜராத் 360005 **("விண்ணப்பதாரர் நிறுவனம் எண் 5"),**

விண்ணப்பதாரர் நிறுவனங்கள் எண். 2, 3, 4 மற்றும் 5-ன் பாதுகாப்பற்ற கடன் வழங்குநர்களின் கூட்டங்கள் குறித்த ஒருங்கிணைந்த அறிவிப்பு மற்றும் விளம்பரம் **("அறிவிப்பு")**

தேசிய நிறுவனச் சட்டத் தீர்ப்பாயத்தின் **(NCLT)** அகமதாபாத் அமர்வு, ஜூலை 02, 2026 தேதியிட்ட உத்தரவின் **("உத்தரவு")** மூலம், விண்ணப்பதாரர் நிறுவனங்கள் எண். 2, 3, 4 மற்றும் 5-ன் **("நிறுவனங்கள்")** பாதுகாப்பற்ற கடன் வழங்குநர்களின் **("பாதுகாப்பற்ற கடன் வழங்குநர்கள்")** கூட்டங்களை நடத்த உத்தரவிட்டுள்ளது என்பதை இதன் மூலம் தெரிவித்துக்கொள்கிறோம், முன்மொழியப்பட்ட இணைப்புத் திட்டத்தை **("திட்டம்")** பரிசீலிப்பதற்கும், பொருத்தமெனக் கருதினால், மாற்றங்களுடனோ அல்லது மாற்றங்கள் இல்லாமலோ அதற்கு ஒப்புதல் அளிப்பதற்குமாக இந்தக் கூட்டங்கள் நடத்தப்படவுள்ளன.

NCLT-யிடம் தாக்கல் செய்யப்பட்ட பிப்ரவரி 28, 2026 தேதியிலான பாதுகாப்பற்ற கடன் வழங்குநர்களின் பட்டியலில் இடம்பெற்றுள்ள அந்தந்த நிறுவனங்களின் பாதுகாப்பற்ற கடன் வழங்குநர்களுக்கு, அக்கூட்டங்களுக்கான அறிவிப்புகள் ஏற்கனவே அனுப்பப்பட்டுள்ளன.

குறிப்பிட்ட உத்தரவு மற்றும் அதில் வழங்கப்பட்ட அறிவுறுத்தல்களின்படி அந்தந்த நிறுவனங்களின் பாதுகாப்பற்ற கடன் வழங்குநர்களுக்கான கூட்டங்கள் **ஆகஸ்ட் 14, 2026 வெள்ளிக்கிழமை** அன்று, காணொளி **("VC")** வாயிலாக அல்லது பிற ஒலி-ஒளி வழிமுறைகள் **("OAVM")** மூலம் பின்வரும் முறையில் நடைபெறும் என்பதை இதன் மூலம் மேலும் தெரிவித்துக்கொள்கிறோம்:

நிறுவனம் பெயர்	CIN	கூட்டம் நேரம் (IST)
விண்ணப்பதாரர் நிறுவனம் எண்.2	U40100GJ2015PTC084878	12:30 PM
விண்ணப்பதாரர் நிறுவனம் எண்.3	U40100GJ2015PTC084657	01:30 PM
விண்ணப்பதாரர் நிறுவனம் எண்.4	U40109GJ2015PTC085095	02:30 PM
விண்ணப்பதாரர் நிறுவனம் எண்.5	U40100GJ2015PTC084658	03:30 PM

பாதுகாப்பற்ற கடனளிப்பவர்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ள இணைப்பைப் பயன்படுத்தி கூட்டத்தில் கலந்து கொண்டு, தங்களின் கருத்துகளைப் பதிவு செய்யலாம்: https://teams.microsoft.com/meet/47253712387059?p=QF4Rj4bloquYIQiwOg Meeting ID: 472 537 123 870 59 Passcode: Rq7Xh38E.

நிறுவனங்கள் சட்டம், 2013-ன் பிரிவு 102 மற்றும் பிரிவுகள் 230 முதல் 232 வரை உள்ள விதிகளின்படி வழங்கப்பட வேண்டிய திட்டத்தின் நகர் மற்றும் விளக்க அறிக்கை ஆகியவற்றை நிறுவனங்களின் பதிவு செய்யப்பட்ட அலுவலகத்தில் அனைத்து வேலை நாட்களிலும் அலுவலக நேரத்தில் கட்டணமின்றி பெற்றுக்கொள்ளலாம். முன்மொழியப்பட்ட திட்டம் தொடர்பாக ஏதேனும் கேள்விகள், விளக்கங்கள் அல்லது ஆவணங்கள் தேவைப்பட்டால் soumi.benerji@edf-power.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கு எழுதலாம் அல்லது திருமதி. சௌமி பெனர்ஜி அவர்களை கீழ்க்கண்ட முகவரி மற்றும் தொடர்பு எண்ணில் அணுகலாம்: முகவரி : Unit 601, 6வது தளம், டவர் C, NBCC World Trade Center, நவ்ரோஜி நகர், Safdarjung Enclave, புதுடெல்லி - 110029, தொடர்பு எண். +91 98916 51943.

NCLT உத்தரவின்படி, இந்தக் கூட்டங்கள் VC/OAVM மூலம் நடைபெறுவதால் பாதுகாப்பற்ற கடனளிப்பவர்கள் நேரில் வருகை தர வேண்டிய அவசியம் இல்லை. இந்தக் கூட்டங்களுக்கு பிரதிநிதி நியமிக்கும் வசதி இல்லை. இருப்பினும், நிறுவனக் கடனளிப்பவர்களின் அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகள், உரிய இயக்குநர் குழு தீர்மானம் அல்லது அங்கீகாரக் கடிதத்தை நிறுவனங்களுக்கு சமர்ப்பித்தால், மின்னணு முறையில் கூட்டத்தில கலந்து கொண்டு வாக்களிக்கலாம்.

இந்தக் கூட்டங்கள் NCLT, முன்னாள் உறுப்பினரும் (நீதித்துறை) மற்றும் முன்னாள் செயல் தலைவருமான திரு. தீப் சந்திர ஜோஷி (deep.chandrajoshi@yahoo.com) அவர்களை கூட்டத் தரைவராக நியமித்துள்ளது. மேலும், வழக்கறிஞர் வந்தனா கோஹ்லி (vandanaak353@gmail.com) அவர்கள் கூட்டத்தின் வாக்கு கண்காணிப்பாளராக (Scrutinizer) NCLT-ஆல் நியமிக்கப்பட்டுள்ளார். மேற்கூறிய திட்டம் சம்பந்தப்பட்ட கூட்டங்களில் ஒப்புதல் பெறும் பட்சத்தில், அது NCLT இறுதி ஒப்புதலுக்கு உட்பட்டதாக இருக்கும்.

நாள் : 14வது ஜூலை, 2026
இடம் : அகமதாபாத்

எமது பதிப்புகள்: சென்னை, புதுவை, வேலூர், கோவை, சேலம், திருச்சி, தஞ்சாவூர், மதுரை, ராமநாதபுரம், நெல்லை, பெங்களூரு, திருவனந்தபுரம்

Published by Vijaya Arun at Kasturi Buildings, 859-860, Anna Salai, Chennai 600002 on behalf of KSL MEDIA LIMITED, and Printed by Ra.Babu Vijay at THG PUBLISHING PVT.LTD. Plot B-6 & B-7, CMDA Industrial Complex, Maraimalai Nagar, Chengleput Taluk, Kancheepuram Dist.Pin: 603209, Editor: V. Venkateswaran (Responsible for selection of news under the PRP Act).